[9th April 1960

நிர்ணய சபையே இந்த சர்வ தேசிய எண்களை உபயோகப்படுத்தவேண்டியது என்ற முடிவுக்கு வந்திருக்கிறதா ? அதன்படியே அரசியல் சட்டத்திலும் இடம் பெற்றிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் சொன்னேன். கான்ஸ்டிட்யூஷனிலேயே இது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தி ந்யூமரல்ஸைப்பற்றி அந்த நேரத்திலே ஒரு பெரிய சர்ச்சை எழுந்து, கடைசியில் ஒரே ஒரு அங்கத்தினர்தான் இந்தி ந்யூமரல்ஸை ஏற்றுக் கொண்டாகவேண்டுமென்று வோட்டுச் செய்தார்கள். மற்றவர்கள் எல்லோரும் இந்தி ந்யூமரல்ஸ் வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டார்கள். இதெல்லாம் சரித்திர சம்பவம். அது கான்ஸ்டிட்யூஷனிலேயே இடம் பெற்றிருக்கிறது.

Hunger strike by the Leaders of the Kundah Electricity Project Works

* *S.N.Q.* 10—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) குந்தா மின்சார தொழிலாளர்களின் குறைகளை தீர்த்துவைக்கும்படி தொழிலாளர்களின் தலைவர்கள் உண்ணுவிரதமிருந்து வருவது உண்மையா ?

(ஆ) எந்த தேதி முதல் ?

(இ) அப்படியானுல் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The President and the General Secretary of the National Project Workers' Union, Kundah, went on hunger strike from 7th March 1960 to impress upon the Government the need for passing favourable orders on certain demands raised by the Union. The hunger strike was called off from about 7-30 p.m. on 9th March 1960.

(*c*) The Commissioner of Labour advised the Union leaders not to go on hunger strike as the demands were under the active consideration of the Government. The Government have examined the demands and orders will be issued shortly.

SRI V. K. KOTHANDARAMAN : தனிப்பட்ட முதலாளிகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் சர்க்கார் முதலாளிகளான எலெக்ட்ரிஸிடி போர்டு நிர்வாகத்தினர் ஒப்பந்தப்படி தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுத காரணத்தினுல், இதுபோன்று உண்ணுவிரதப் போராட்டத்திலே இறங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அங்கே உண்ணுவிரதத்தைக் கைவிட்டு நேரடியாக சென்னைக்கு வந்தால் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்து வைக்கிரேும் என்று சொன்னதன்பேரில் அவர்கள் வந்தார்களே, அதன் விளைவாக பேச்சுவார்த்தை நடத்தி இதுவரை தீர்த்துவைக்கப்பட்டதா ? அப்படியில்லையென்றுல், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதிலே இரண்டு அமைச்சர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. கனம் கோதண்டராமன் அவர்கள் கேட்ட கேள்விகளெல்லாம் கனம் மந்திரி ஸ்ரீ ராமைய்யா அவர்களுக்குப் போட வேண்டியவை. நேரடியாகத் தொழிலாளர்களிடத்தில் தொடர்பு வைத்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கவனிக்கவேண்டியது நிர்வாக இலாகாவினுடைய பொறுப்பு. அது சரியாய் வராமல் ஏதாவது வேலை நிறுத்தம் போன்று தொழில் தகராறு ஏற்படும்போது சர்க்கார் தொழிலாளர் இலாகா தலையிட்டுத் தீர்த்து வைக்க முயற்சி செய்கிறது. அதைத்தான் நான் சொன்னேன்.

9th April 1960]

SRI J. MATHA GOWDER : உண்ணுவிரதத்தை நிறுத்திவிட்டு சென்னைக்கு வாருங்கள் என்று அமைச்சர் அவர்கள் கூப்பிடுவதற்கு முன்னுலேயே உண்ணுவிரதம் இருந்தது தவறு என்று அவர்களாகவே வேலைக்குப் போய்விட்டார்கள் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

(பதில் இல்லை.)

SRI K. ANBAZHAGAN : உண்ணு விரதத்தில் ஈடுபட்டுள்ள அந்தத் தொழிலாளர்கள் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்திருக்கிற குறைகள் என்ன ? அந்தக் குறைகளை அதற்குரிய நிர்வாகப் பொறுப்புள்ள குழு நிறைவேற்றிவைக்கத் தவறிவிட்டது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைகள் என்ன என்று கேட்டால் அது ஒரு பட்டியல். அதைப்பற்றி தனியாக ஒரு கேள்வி போட்டால் அதை மேஜையின்மீது வைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். குறைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை என்று சொல்லுகிறபொழுது, தொழிலாளர்கள் எதைக் கேட்டாலும் உடனே அதைக் கொடுத்துவிட வேண்டும், அப்பொழுதுதான் குறைகள் நிவர்த்தி செய்ததாகும் என்று யாரும் கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன். சர்க்கார் அவைகளை பரிசீலனை செய்துதான் எந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும், எதை நிறைவேற்ற முடியாது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. உதாரணமாக எல்லா தொழிலாளர்களையும் பர்மனெண்ட் செய்யவில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. எல்லோரையும் பர்மனெண்ட் செய்துவிட்டால் ப்ராஜக்ட் முடிந்தவுடன் அவர்களை என்ன செய்வது என்ற பிரச்சினை எழுகிறது. ஆகவேதான் இந்தக் குறைகள் நிவர்த்திக்கப்படவில்லை என்று சொல்லுகிற பொழுது, அவைகளை பரிசீலனை செய்யாமல் ஒன்றும் சொல்ல முடியவில்லை. பரிசீலனை செய்வதற்கு பல சந்தர்ப்பங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் முக்கியமாக வேறு ப்ராஜக்ட்களில் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பது போன்ற விஷயங்கள் எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் நிர்ணயம் செய்ய முடியும். ஆகையால் சற்று தாமதம் ஆகிறது.

MR. SPEAKER : மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் உப கேள்விகள் கேட்கப்படுகின்றன. மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட உப கேள்விகளைத்தான் கேட்க வேண்டும். 'Whether it is a fact that the leaders of the workers of the Kundah Electricity Project are on hunger strike, and if so, the action taken in the matter' என்பது தான் மூலக் கேள்வி.

SRI K. ANBAZHAGAN : அதில் காரணம் கேட்டிருக்கிறது. அதனுல்தான் கேட்டேன். Is my supplementary irrelevant, Sir ?

MR. SPEAKER : நான் கனம் அங்கத்தினருக்கு என்று சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னேன். அதை கனம் அங்கத்தினர் தனக்கு என்று எடுத்துக்கொண்டால் நான் என்ன செய்ய முடியும் ?

SRI M. KALYANASUNDARAM : இந்தக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகள் லேபர் கமிஷனரால் பரிசீலனை செய்யப்பட்டு, லேபர் டிபார்ட்மெண்டுக்கு ரிப்போர்ட்டு அனுப்பப்பட்டிருந்தும், ஏன் அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. லேபர் கமிஷனர் சிபார்சு செய்திருக்கக்கூடிய கோரிக்கைகளாவது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது கனம் கலியாணசுந்தரம் அவர்கள் வருவதற்கு முன்னுல்தான் இந்த இரண்டு இலாகாக்களுடைய பொறுப்புக்களையும் நான் விளக்கிச் சொன்னேன். தொழிலாளர்கள் இலாகா எது நியாயமோ, தொழில் சங்க சட்டப்படி, இப்பொழுது தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இருக்கும் உறவுப்படி எதை அனுமதிக்க வேண்டும், எதை கொடுக்கவேண்டுமென்ற

[9th April 1960

அபிப்பிராயம் கூறுகிறது. நிர்வாக இலாகா அதை ஏற்றுக்கொண்டு நடத்தினால் அதற்கு எவ்வளவு செலவு ஆகும், அதற்கு பணம் எவ்வளவு வேண்டும், எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்பதையெல்லாம் கணக்கு செய்து அவர்கள்தான் அதுபற்றி முடிவு செய்யவேண்டும். சர்க்கார் இலாகாக்களில் தொழிலாளர் இலாகா சிபார்சு செய்யக்கூடிய நிலைமையில் தான் இருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN : 'இரண்டு ஆட்டை ஊட்டிய குட்டி' என்று சொல்லுவது போல. . .

Mr. SPEAKER : இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. கனம் அங்கத்தினர் நான் சொல்லுவதை கேட்காவிட்டால் அவர்கள் உப கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கமாட்டேன். கேள்வி நேரத்தில் இந்த மாதிரி பழமொழி எல்லாம் சொல்லுவது சரியல்ல. நேராக கேள்வி கேட்க வேண்டும்.

Sri V. K. KOTHANDARAMAN : தொழிலாளர் மந்திரியைக் கேட்டால் மின்சார மந்திரியை கேட்கவேண்டும் என்றும், மின்சார மந்திரியைக் கேட்டால், போர்டை கேட்க வேண்டுமென்றும், போர்டை கேட்டால் சர்க்காரைக் கேட்க வேண்டுமென்றும், மூன்று ஆட்டை ஊட்டிய குட்டி போல. . .

Mr. SPEAKER : இந்தக் கேள்வி 'அவுட் ஆப் ஆர்டர்'. கனம் அங்கத்தினருக்கு உபகேள்விகள் கேட்பதற்கு சான்ஸ் கொடுக்க மாட்டேன் என்று 'வார்ன்' பண்ணுகிறேன். கேள்வி நேரத்தின்போது பழமொழி சொல்லக்கூடாது என்று சொன்னால், கனம் அங்கத்தினர் திரும்பவும் பழமொழியை 'ரிபீட்' செய்கிறார்கள். அவர்களுக்கு உப கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்காவிட்டால் மன்னிக்க வேண்டும்.

Sri K. ANBAZHAGAN : தொழிலாளர்கள் பட்டினி இருப்பதன் காரணம் முன்னர் ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை என்பது. அந்த ஒப்பந்தத்தை பாதுகாக்க தொழில் இலாகாவுக்கு உரிமை இல்லையா? அந்த ஒப்பந்தம் நடத்தப்பட்டு வருகிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN : பழைய ஒப்பந்தம் ஏற்பட்டதற்கும் இப்பொழுது இவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Housing Scheme for Plantation Labour

* 646 *Q.*—Sri N. R. THIAGARAJAN (on behalf of Sri W. P. A. R. CHANDRASEKARAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to include the housing scheme for the Plantation Labour in the housing scheme for the Industrial Labourers ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri N. R. THIAGARAJAN : சாதாரண பிராந்தியங்களைக் காட்டிலும் மலைப் பிராந்தியங்களில் தொழிலாளர்கள் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அரசாங்கம் கொஞ்சம் கருணை கூர்ந்து இதை பரிசீலனை செய்யுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : வீடு கட்டும் திட்டத்தில் 'பிளான்டேஷன் லேபர் ஹௌஸிங்'க்கு தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது பூராவும் கடன் தொகையாகத்தான் கொடுக்கப்படும். 'ஸப்ஸிடைஸ்டு இண்டஸ்டிரியல் ஹௌஸிங் ஸ்கீம்'படி ஓரளவு மானியம் கொடுக்கப்படுகிறது. இந்த மானியம்தான் இப்பொழுது இல்லை என்று சொன்னேன். ஆனால் 'பிளான்டேஷன் ஹௌஸிங் ஸ்கீம்' பிரகாரம் கடன் கேட்டால் அது கொடுக்கப்படும்.